**தலைப்பு 257 - மாவட்ட செயலகம், களுத்துறை**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

---

(அ) மாவட்டத்தின் ஒட்டுமொத்த நிர்வாக நடவடிக்கைகளை செயற்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

(ஆ) மாவட்டத்தினுள் தேர்தல் கடமைகளை செயற்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

(இ) மாவட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை செயற்படுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள்.

(ஈ) மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தின் சார்பாக மாவட்டத்தினுள் தொடர்புடைய கடமைகளை செயற்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

(உ) மாவட்டத்திலுள்ள ஓய்வூதியம் பெறும் பிரசைகள் தொடர்பான அலுவலக ரீதியான நடவடிக்கைகள்

(ஊ) பாதுகாப்பு அமைச்சின் கீழ் மாவட்டத்தினுள் வெடிபொருட்கள் உத்தரவுப் பத்திரம் மற்றும் வெடிபொருள் அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை விநியோகத்தலுடன் சம்பந்தப்பட்ட பணிகள்.

(எ) மாவட்டத்தினுள் சமூக நலனோம்பல், இடர் முகாமைத்துவம் மற்றும் இடர் நிவாரணப் பணிகள்

(ஏ) மாவட்டத்தினுள் விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடலுடன் சம்பந்தப்பட்ட பணிகள்

(ஐ) தேசிய விழாக்களுடன் இணைந்ததாக மாவட்ட மற்றும் பிரதேச விழாக்களை ஒழுங்குசெய்து மேற்பார்வை செய்தல்

(ஒ) மாவட்டத்தினுள் கலாச்சார மற்றும் மத ரீதியான நடவடிக்கைகளை செயற்படுத்துதல்

(ஓ) மாவட்டத்தினுள் குறைந்த வருமானம் பெறுவோரின் வாழ்வாதார நிலையினை கட்டியெழுப்புவதுடன் தொடர்புடைய பணிகள்

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

---

| | | | |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை | (ஒ) | வலல்லாவிட்ட |
| (ஆ) | பாணந்துறை | (ஓ) | பாலிந்தநுவர |
| (இ) | பண்டாரகம | (ஔ) | மதுராவெல |
| (ஈ) | ஹொரணை | (க) | மில்லனிய |
| (உ) | புலத்சிங்கள | (கா) | இங்கிரிய |
| (ஊ) | தொடங்கொடை | | |
| (எ) | பேருவளை | | |
| (ஏ) | மதுகம | | |
| (ஐ) | அகலவத்த | | |

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

---

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 07 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.4 கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் பிரகாரம் களுத்துறை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) மற்றும் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) ஒதுக்கீட்டுக்கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 706,973,341 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 699,158,355 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ஒரு சதவீத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சேமிப்பு ரூபா 7,814,806 ஆக காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 646,373,341 | 639,107,228 | 7,266,113 | 1 |
| மூலதனம் | 60,600,000 | 60,051,307 | 548,693 | 1 |
| **மொத்தம்** | **706,973,341** | **699,158,535** | **7,814,806** | **1** |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 24 அமைச்சுக்களிடமிருந்தும் 18 திணைக்களங் களிடமிருந்தும் முறையே ரூபா 2,743,491,434 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்தது. இதில் முறையே ரூபா 970,796,815 மற்றும் ரூபா 1,757,481,110 உள்ளடங்கலான ரூபா 2,728,277,925 கூட்டுமொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் இறுதியளிவில் முறையே ரூபா 2,541,828 மற்றும் ரூபா 12,671,681 உள்ளடங்கலான ரூபா 15,213,509 கூட்டுத்தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு கிடைத்திருந்த நிதியேற்பாட்டில் முறையே 0.26 சதவீதத்திற்கும் 0.72 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 25701 | 70,000,000 | 51,206,635 | 38,000,000 | 62,418,028 | 265,000,000 | 198,848,445 |

## 1.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி பாணந்துறை பிரதேச செயலகத்தின் பற்றாக்குறையாக குறிப்பிடப்பட்டுள்ள டீ.வீ.டீ. இயந்திரம் மற்றும் தொலைக்காட்சி பெட்டி தொடர்பில் நிதிப்பிரமாணம் 102 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கிலும் அந்த நட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 இணக்கமின்மைகள்

பின்வரும் இனக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்படுகின்றன.

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

ஓய்வூதியம் செலுத்துதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் 2009 சனவரி 01 ஆந் திகதிய 1/2009 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரகாரம் வலதுகுறைந்த விதவைகளுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்கின்றது என்பது குறித்து கிராம உத்தியோகத்தரின் மாதாந்த அறிக்கையொன்று கோவையில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

2013 இன் 17 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி திருத்திய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பெறுமதிசேர் வரிக்காக சம்பந்தப்படாத தனியார் நிறுவனமொன்றிற்கு 2013 சனவரி முதல் மார்ச் வரை ரூபா 33,104 மொத்தத்தொகை பெறுமதிசேர் வரியாக செலுத்தப்பட்டிருந்தது. இத்தொகையினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.8 செயற்றிட்டத்தினை அமுல்படுத்துவதிலுள்ள நலிவுகள்**

---

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது இடைநடுவில் கைவிடப்படுதல், செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடுதல் மற்றும் செயற்திட்டத்தின் தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றங்கள் இல்லாத செயற்திட்டங்கள்**

---

பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயன்முன்னேற்றம் காணப்பட்டிருக்காத பின்வரும் செயற்திட்டங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(i) திவிநெகும மீன்பிடி விளைச்சலுக்குப் பிந்திய தொழில்நுட்ப செயற்திட்டத்தின் கீழ் மாசிக்கருவாடு உற்பத்திக்காக மாசிக்கருவாடு தொட்டிகளை வழங்குவதற்காக பேருவல பிரதேச செயலகத்திற்கு ரூபா 320,000 நிதி ஏற்பாடு 2013 ஏப்ரல் 18 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையில் தொட்டியில் ஏறத்தாழ 5 கி.கிராம் மீனை மாத்திரமே உலர வைப்பதற்கு முடிந்திருந்தமையால் தொட்டி போதியதாக இருக்கவில்லை என்பது நலனாளிகளின் கருத்தாக இருந்ததுடன் சிறிய அளவில் மீன்களை கொள்வனவு செய்கையில் அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளதாகவும், அதன் காரணமாக மாச்சிக்கருவாடு உலர்த்துதல் இலாபகரமற்றது என்றும் தெரிவித்திருந்தனர். இச் செயற்திட்டத்தினை செயற்படுத்தவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவினை வழங்குதல் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. திவிநெகும செயற்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டிலிருந்து அமுல்படுத்தப்பட்டிருந்தமையால், இது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்தல் கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பொறுப்பாக காணப்பட்டது. இந்த தொட்டிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது கைவிடப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் வெளிப்பட்டிருந்தன.

(ii) திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் 40 நலனாளிகளிற்காக ரூபா 107,200 பெறுமதியான 400 கோழிக்குஞ்சுகள் ஹொரண பிரதேச செயலகத்தினால் 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி

பகிர்ந்நதளிக்கப்பட்டிருந்தன. 2014 பெப்ரவரி மாதத்திற்கான பின்தொடர் ஆய்வறிக்கையின் படி 04 மாதங்கள் முடிவதற்கு முன்னரே அவற்றில் 83 கோழிக்குஞ்சுகள் இறந்திருந்தன.

**1.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச செயலகங்களால் 2013 ஆம் அண்டிற்காக வரையப்பட்டிருந்த ரூபா 82,000 பெறுமதியான 02 காசோலைகள் 2014 ஏப்ரல் 23 ஆந் திகதி வரை குறித்த நிறுவனத்திற்கு அல்லது நபர்களிற்கு கையளிக்கப்படாது அலுவலகத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 மார்ச் 31 ஆந் திகதியளவில் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் படி, 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,056,005 பெறுமதியான 48 காசோலைகள் மாற்றப்படாதிருந்ததுடன் அக்காசோலைகளில் அதிகமான காசோலைகள் காலநீடிப்புச் செய்யப்பட்டு, மீண்டும் வழங்கப்பட்டிருந்த காசோலைகளாக காணப்பட்டன.

**1.10 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

2012 இன் கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தியகம 4 ஆம் கட்டடையில் கஹபட வீதிக்கு குடி நீரை வழங்குவதற்காக ரூபா 1,000,000 தொகை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 2012 மே 23 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. நீர்க்குளாய்களை பொருத்தும் வீதியின் நீளம் மற்றும் ஒவ்வொரு செலவு விடத்தின் கீழும் செலவாகும் செலவினம், நீர்க் குளாய்களின் தடிப்பம் போன்றன தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இச்செயற்திட்டம் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் அத் தொகையில் ரூபா 107,143 தொகை கழிக்கப்பட்டு ரூபா 852,857 தொகை மாத்திரம் 2014 ஏப்ரல் 21 ஆந் திகதி களுத்துறை பிரதேச செயலகத்திற்கு மீளளிக்கப்பட்டிருந்தது. அத்தொகை பொது வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்பட்டிருந்தது. அதன்படி, உரிய விதத்தில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமையால், குறித்த செயற்திட்டத்தினை நிறைவேற்ற முடியாது போயிருந்தது. அவ்வாறே அரசாங்க நிதி ஏறத்தாழ 2 ஆண்டுகள் பயனற்ற விதத்தில் ஏனைய நிறுவனமொன்றில் வைக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 107,143 பயனற்ற செலவினமாக காணப்பட்டது.

## 1.11 முகாமைத்துவ பலவீனங்கள்

---

தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பேருவல பிரதேச செயலகம் தொடர்பில் மீளாய்வாண்டில் சனாதிபதி நிதியத்திலிருந்து 12 நோயாளர்களிற்காக உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தகவல்களை வழங்குவதில் காணப்பட்ட தாமதங்கள் காரணமாக மாரடைப்பு நோய் மற்றும் சத்திர சிகிச்சைகளிற்காக உதவிகளை வழங்குதல் தாமதமடைந்திருந்தன.

(ஆ) சமூக சேவைகள் அமைச்சின் வலது குறைந்த நபர்களிற்கான தேசிய செயலகத்தினால் செயற்படுத்தப்படுகின்ற ஊனமுற்றோர் வீடமைப்பு உதவி வழங்குதல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2009, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் உதவிகளைக் கோரியிருந்த 4 நளனாளிகளிற்காக ரூபா 700,000 தொகை அனுமதிக்கப்பட்டிருந்தது. ஒவ்வோர் ஆண்டின் போதும் பகுதி பகுதியாக செலுத்தப்பட்டிருந்த உதவித் தொகை ரூபா 420,000 ஆகும். எஞ்சிய தொகைகள் கணக்காய்வுத் திகதியான 2014 மே 12 ஆந் திகதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டு முதல் உதவிகளைக் கோரி விண்ணப்பித்திருந்த 5 விண்ணப்பதாரிகளிற்கு கணக்காய்வுத் திகதி வரை உதவிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஊனமுற்ற நபர்களிற்காக உதவிகளை வழங்குகையில் தேவையான அறிக்கைகள், உடன்படிக்கைகளை உள்ளடக்கி கோவைகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.12 மனிதவளங்கள் முகாமைத்துவம்

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 49 | 48 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 34 | 26 | 08 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,315 | 1,039 | 276 |
| (iv) | ஆரம்ப நிலை | 154 | 149 | 05 |
| | மொத்தம் | 1,552 | 1,262 | 290 |

கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 15 ஆந் திகதி வரை மாவட்டச் செயலகத்திற்குரிய மொத்த ஊழியர் எண்ணிக்கை தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.